***Tamilmanam International Research Journal of Tamil Studies***
*An international, peer-reviewed monthly academic research journal*
**ISSN: 3049-0723 (Online)**
**3107-7781 (Print)**

# தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

Peer-Reviewed Open Access Crossref Google Scholar
SJIF Impact Factor3.5 (2024-) Multidisciplinary
doi : https://doi.org/10.63300/tm12042026

UGC Approved by Transparent Peer Review

**Vol. 12 No. 04 (2026): September 2026**, **p432-444** | Available online at: www.tamilmanam.in

*Original Research Paper – Peer reviewed* ✓

# சங்க இலக்கியத்தில் இயற்கை

*Nature in Sangam Literature: A Study of Akam–Puram Traditions*

**சே. அகிலா,**
உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத்துறை, ஸ்ரீமதி இந்திரா காந்தி கல்லூரி
(பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் இணைவுப் பெற்றது), திருச்சிராப்பள்ளி – 02
மின்னஞ்சல்: **akilas@sigc.edu**, தொலைபேசி: 6379614819

**S. AKILA*,**
*Assistant professor, Department of Tamil, Shrimati Indira Gandhi College, (Affiliated with Bharathidasan University), Tiruchirappalli-2, Tamil Nadu, India.*
*Email: akilas@sigc.edu*

***Article history***
Received: 20-08-2026
Revised: 01-09-2026
Accepted: **08-09-2026**
Published on: **10-09-2026**

*Corresponding Author
Email: *akilas@sigc.edu*

**Abstract:**

This research paper extensively examines the role of nature in Sangam literature and its deep bond with human life. Sangam poets did not view nature merely as an object of beauty, but portrayed it as a reflection of human emotions and an indispensable part of inner (Akam) and outer (Puram) life. Based on the Tolkappiyam principle that the world is an amalgamation of the five elements, this paper clarifies how nature is inextricably interwoven into the Tinai concepts of Mutharporul (time and land), Karupporul (native elements), and Uripporul (human emotions/behavior).

In Akam literature, to convey psychological states such as the separation, longing, and waiting of the hero and heroine, Vengai and Punnai trees, along with monsoon flowers, are utilized as messengers, witnesses, and symbols. In Puram literature, forests, Parambu mountain, and Mullai flowers are employed as metaphors to express the valor, generosity, and tragic grief (Kaiyarunilai) of kings. Drawing evidence from various Sangam works such as Kurinjippattu, Tirumurukattuppadai, and Purananuru, this paper comprehensively synthesizes the nature-integrated lifestyle of the ancient Tamils and the intricate natural descriptions of the poets.

**Keywords:** *Sangam Literature, Nature, Tinai Concept, Akam-Puram Lifestyle, Tolkappiyam, Karupporul.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

**Article DOI: https://doi.org/10.63300/tm12042026.33**

**ஆய்வுச்சுருக்கம்**

இவ்வாய்வுக் கட்டுரை சங்க இலக்கியத்தில் இயற்கையின் பங்களிப்பையும், மனித வாழ்வோடு அது கொண்டுள்ள ஆழமான பிணைப்பையும் விரிவாக ஆராய்கிறது. சங்க காலப் புலவர்கள் இயற்கையை வெறும் அழகுப் பொருளாக மட்டும் பார்க்காமல், மனித உணர்வுகளின் பிரதிபலிப்பாகவும், அக–புற வாழ்க்கையின் இன்றியமையாத அங்கமாகவும் படைத்துள்ளனர். ஐம்பூதங்களின் சேர்க்கையே உலகம் என்ற தொல்காப்பியக் கோட்பாட்டின் அடிப்படையில், திணைக் கோட்பாடுகளான முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் ஆகியவற்றில் இயற்கை எவ்வாறு இரண்டறக் கலந்துள்ளது என்பதை இக்கட்டுரை தெளிவுபடுத்துகிறது. அக இலக்கியத்தில் தலைவன்–தலைவியின் பிரிவு, இயக்கம், காத்திருப்பு போன்ற மனவுணர்வுகளை உணர்த்த வேங்கை, புன்னை மரங்களும், கார்கால மலர்களும் தூதாகவும் சாட்சியாகவும் குறியீடாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. புற இலக்கியத்தில் மன்னர்களின் வீரம், கொடைத்தன்மை, மற்றும் அவலச் சூழலை (கையறுநிலை) வெளிப்படுத்தக் காடுகளும், பறம்பு மலையும், முல்லைப் பூவும் உவமைகளாகக் கையாளப்பட்டுள்ளன. குறிஞ்சிப்பாட்டு, திருமுருகாற்றுப்படை, புறநானூறு போன்ற பல்வேறு சங்க நூல்களிலிருந்து சான்றுகளைக் கொண்டு, பண்டைய தமிழர்களின் இயற்கையோடு ஒன்றிய வாழ்வியல் முறையையும், புலவர்களின் நுட்பமான இயற்கை வருணனைகளையும் இக்கட்டுரை முழுமையாகத் தொகுத்துரைக்கிறது.

**திறவுச்சொற்கள்:** சங்க இலக்கியம், இயற்கை, திணைக்கோட்பாடு, அக–புற வாழ்வியல், தொல்காப்பியம், கருப்பொருள்.

## 1. முன்னுரை

தமிழ் இலக்கிய மரபில் மிகத் தொன்மையான தொகுப்பாகத் திகழும் சங்க இலக்கியம், மனித வாழ்வையும் இயற்கையையும் ஒன்றுக்கொன்று பிரிக்க முடியாத வகையில் பின்னிப் பிணைத்துப் படைக்கப்பட்டுள்ளது. சங்க காலச் சான்றோர்கள் இயற்கையினைத் தனி ஒரு கூறாகப் படைக்கவில்லை; அந்தந்த நிலங்களுக்கேற்பவும் மக்களின் சூழலுக்கேற்பவும் அதனை அமைத்தனர். இயற்கை என்பது மனிதனால் படைக்க முடியாதவை ஆகும். இயற்கை ஐம்பூதங்களின் தொகுப்பில் அமைகிறது. அதனைத் தொல்காப்பியர்,

*"நிலம் நீர் தீ வளி விசும் போடைந்தும்*
*கலந்த மயக்கம் உலகம்"*

*— தொல்காப்பியம், அகத்திணையியல் (உ.கு. 1)*

என்று கூறுவதால், நிலம், நீர், தீ, காற்று, வானம் ஆகிய ஐந்தும் கலந்தது உலகம் எனலாம். இவ்வுலகைத் தொல்காப்பியர், நிலமும் பொழுதும் என்று முதற்பொருளாக அமைத்ததிலும் இயற்கைக் கூறுகளைக் காணலாம். அதனை,

*"முதலெனப் படுவது நிலம் பொழுதிரண்டின்*
*இயல்பென மொழிப இயல் புனர்ந்தோரே"*

*— தொல்காப்பியம் (உ.கு. 2)*

என்ற நூற்பாவால் அறியலாம். கருப்பொருள்களிலும் இயற்கையழகைத் தொல்காப்பியர் பின்வருமாறு நூற்பாவாக்கினார்.

*"தெய்வம் ஊணாவே மாமரம் புட்பறை*
*செய்தியாழில் பகுதியோடு தொகைஇ*
*அவ்வகை பிறவும் கருவென மொழிப"*

*— தொல்காப்பியம் (உ.கு. 3)*

பண்டைத் தமிழர்கள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற நில அடிப்படையிலும்; கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என்ற பெரும்பொழுதிலும்; மாலை, யாமம், வைகறை, விடியல், நண்பகல் என்ற சிறுபொழுதுகளிலும் அக இலக்கியங்களின் இயற்கையை மணம்பட படைத்துக் காட்டுகின்றனர். மேலும், உரிப்பொருளாகிய புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் போன்ற உணர்வுநிலைகளிலும் அந்தந்தத் திணைகளுக்குரிய இயற்கை அழகை அக இலக்கியங்களில் காணலாம்.

**திணைக் கோட்பாடும் இயற்கைக் கூறுகளும்**

| திணை | நிலம் | பெரும்பொழுது | சிறப்பு இயற்கைக் கூறுகள் | உரிப்பொருள் |
|---|---|---|---|---|
| குறிஞ்சி | மலையும் மலை சார்ந்த இடமும் | கார், கூதிர் | வேங்கை மலர், மயில், கருங்குரங்கு | புணர்தல் |
| முல்லை | காடும் காடு சார்ந்த இடமும் | கார் காலம் | முல்லை மலர், தேரை, வண்டு | இருத்தல் / ஆற்றியிருத்தல் |

**Article DOI:** https://doi.org/10.63300/tm12042026.33

| திணை | நிலம் | பெரும்பொழுது | சிறப்பு இயற்கைக் கூறுகள் | உரிப்பொருள் |
|---|---|---|---|---|
| மருதம் | வயலும் வயல் சார்ந்த இடமும் | எல்லாக் காலமும் | மருத மலர், நீர்நிலை | ஊடல் |
| நெய்தல் | கடலும் கடல் சார்ந்த இடமும் | எல்லாக் காலமும் | நெய்தல் மலர், மீன், தென்னை | இரங்கல் |
| பாலை | வறண்ட நிலம் | முதுவேனில், இளவேனில் | பாலை மரம், கல் நிறை வழி | பிரிதல் |




***படம் 1:** தொல்காப்பிய அகத்திணைக் கோட்பாட்டின்படி நிலமும் இயற்கைக் கூறுகளும் (ஆசிரியர் தொகுப்பு)*

## 2. அக இலக்கியத்தில் இயற்கை

| Copyright © Author(s)

மனித வாழ்வில் பல்வேறு கூறுகளையும் வருணித்துச் சங்க காலத் தமிழ்ச் சான்றோர்கள் இயற்கையைத் தெளிவுற அக இலக்கியங்களில் பயன்படுத்தினர். ஒத்த தலைவனும் தலைவியும் கூடி இன்புறும் இன்பத்தை இத்தகையது எனக் குறிப்பிடாதவை அகம் ஆகும். அதனைத் தொல்காப்பியர்,

*"மக்கள் நுதலிய அகன் ஐந்திணையும்*
*சுட்டி ஒருவர்ப் பெயர் கொளப் பெறாஅர்"*

*— தொல்காப்பியம் (உ.கு. 4)*

என்ற நூற்பாவிற்கேற்ப அக இலக்கியம் அமைகின்றது. பெரும்பாலும் இத்தகைய இலக்கியங்களிலேயே இயற்கைப் புனைவுகள் அமைகின்றன. தலைவன் தலைவியைப் பிரிந்து பொருள் தேடிச் சென்றுள்ளான். தலைவி பிரிவால் துன்பப்படுவாள் என்று அறிந்தும், அப்பிரிவை நீ எவ்வாறு பொறுத்துக் கொள்வாய் என்பதைக் கபிலர் மிகவும் இயற்கை நயம்படக் கூறுகிறார்.

*"இனமயில் அகவும் மரம்பயில் கானத்து*
*நரைமுக ஊகம் பார்ப்பொடு பனிப்பப்*
*பெருமழை பொழிந்த சாரல் அவர் நாட்டுக்*
*குன்றம் நோக்கினேன் தோழி*
*பண்டையற்றோ கண்டிசில் நுதலோ"*

*— கபிலர் (உ.கு. 5)*

என்ற அடிகளால், தலைவன் மலையைக் கடந்ததும் பசலை நோய் தீரும் என்ற தலைவியின் நம்பிக்கையும், அவளது துன்பம் நீங்க நாட்டினது இயற்கை வனப்பும் துணைபுரிவதை அறியலாம். தலைவன் தலைவியின் அக நோக்கிற்கேற்பக் குழலும், உணர்ச்சிகளும் அமைகின்றன; இவை மனித உணர்வின் அடிப்படையான இயற்கை உண்மையாகும்.

தலைவன் கார்காலத்தில் வருவேன் என்று தலைவிக்கு உரைத்த சொல் உண்மையாகிறது. கார்காலத்திற்குரிய தேரைகளும் வண்டுகளும் ஓசையெழுப்புகின்றன. முல்லை போன்ற மலர்கள் பூத்து மனம் கமழ்கிறது. எனவே தலைவன் வருவதற்கான ஓசைகளைக் கேட்ட தலைவி, இனிப் பசலை நோய் தீர்க என்கிறாள்.

*"வண்டு தாது ஊதத் தேரை தெள்ளிசைப்ப*
*தண்கமழ் புறவின் முல்லை மலர*
*இன்புறுத் தன் பொழுதே*
*நின்குறி வாய்த்தனம் தீர்க இனிப் படரே"*

*— பேயனார் (உ.கு. 6)*

என்ற அடிகளால் பேயனார் உணர்த்தும் இயற்கையழகை அறிய முடிகிறது. இதனால் தம் வாழ்வோடு இயற்கையையும் புனைந்து பாடுபொருளாக அமைத்தனர் என அறியலாம். சங்க இலக்கியங்களில் மனித வாழ்வின் பிணைப்பாக அமைவது இயற்கை எனலாம்; வாழ்க்கையும் இயற்கையும் பிரித்துக் கூற முடியாதவாறு இரண்டறக் கலந்ததாக அமைத்துள்ளனர்.

தலைவனுக்குத் தலைவியை மணம் முடிப்பது உறுதியாகி, அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய சில நாட்கள் ஆகின்றன. அச்சிறிது காலமும் தாங்காத மனம் கொண்ட தலைவி, தான் பல நாட்கள் தனிமையோடு இருந்த வேங்கை மரத்தைப் பார்த்துத் தோழியிடம், எனக்கு ஒரு செய்தி கூறாவிட்டாலும் அம்மரத்துக்காவது ஒரு செய்தி கூறினாரா என வினவுகிறாள்.

*"நமக் கொன்று உரையாராயினும் தமக்கொன்று*
*இன்னா இரவில் இன்துணையாகிய*
*படப்பை வேங்கைக்கு மறந்தனர் கொல்லோ*
*தர தல் வல்லியோர் புள்வாய்த்*
*தூதோ"*

*— நக்கீரர் (உ.கு. 7)*

என்ற அடிகளால் காதலர்களோடு வேங்கை மரம் பெற்ற தோழமை உணர்வை நக்கீரர் கூறுவதன் மூலம் அறியலாம். தலைவனைப் பிரிந்து துயரோடு இருக்கும் தலைவி, ஆண் பறவைகளும் பெண் பறவைகளும் இணைந்து செல்வதைக் கண்டு, தொலைநாட்டில் உள்ள தலைவன் தனிமையாய் ஏன் இருக்கின்றான் எனத் தோழியிடம் இயற்கையை விளித்துக் கேட்கிறாள்.

*"வல்லாள் கொல்லோ தானே அவனை*
*கல்லுடை நன்னாட்டுப் புள்ளின் அபருந்தொடு*
*யாம் துணை புணர்ந்தது உரைதும்*
*யாங்குப் பிரிந்துறைதி என்னாதவ்வோ"*

*— (உ.கு. 8)*

என்ற அடிகளால் இயற்கை விளித்துக் கூறுவதன் மூலமும் அக உணர்வுகள் அமைவதைக் காணலாம்.

பண்டைத் தமிழர்கள் எல்லா உயிர்களுக்கும் அன்பு செலுத்தும் மனப்பான்மை கொண்டவர்கள் என்பதை ஒரு சங்க இலக்கியப் பாடல் இயம்புகிறது. புன்னைக் கொட்டை ஒன்றை மணலில் விட்டுச் சென்ற ஒரு விளையாட்டுப் பெண், அது முளைத்து வளர்வதைக் கண்டு, தான் உண்ணும் நெய்யும் பாலும் ஊற்றி வளர்க்கிறாள். பின்னாளில் அப்பெண் திருமணமாகி, தன் காதலனோடு இருக்கும்போது அப்புன்னை மரத்தடியில் நிற்காமல் நாணத்தோடு விலகிச் செல்கிறாள்; தன் தாய்

தன் சிறுபிராயத்தில் அப்புன்னைச் செடியைப் பற்றிக் கூறியதை நினைவுகூர்ந்து, அம்மரத்தையும் சகோதரியாக நினைக்கும் இயற்கை உணர்வை,

*“விளையாடு ஆயமொடு வெண்மணல் அழுத்திய*
*மறந்தனம் துறந்த காழ்முளை அகைய*
*நெய்பெய் தீம்பால் பெய்தினிது வளர்ப்ப*
*தம்மினும் சிறந்தது நுவ்வை ஆகுமென்று*
*அன்னை கூறினள் புன்னையது சிறப்பே*
*அம்ம நாணுதும் நும்மொடு நகைய”*

*— (உ.கு. 9)*

என்ற அடிகளால் உள்ளத்துணர்வுகளையும் இயற்கை அழகையும் காணலாம். தலைவன் தலைவி மேல் வைத்திருக்கும் அன்பின் நிலையைத் தும்பியை விளித்துப் பாடுவதை,

*“கொங்கு தேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி*
*காமம் செப்பாது கண்டது மொழிமோ*
*பயிலியது கெழீஇய நட்பின் மயிலியல்*
*செறியெயிற்று அரிவைக் கூந்தலின்*
*நறியவும் உளவோ நீ அறியும் பூவே”*

*— இறையனார் (உ.கு. 10)*

என்ற அடிகளால் இறையனார் இயற்கை நயம்படக் கூறுவதை அறியலாம். சங்க இலக்கியப் பாக்கள் இயல்பான பேச்சிலும் இயற்கை நயத்திலும் அமைத்துக் காட்டுவர். குறிஞ்சிப்பாட்டில் தொண்ணூற்றொன்பது வகையான பூக்களைக் கூறும் இயற்கை அழகைக் கபிலர் உணர்த்துவதன் மூலம் அறியலாம். மழை பெய்தலால் முல்லைக் காடு செழித்திருப்பதை நப்பூதனார்,

*“செறி இலைக் காயா அஞ்சனம் மலர*
*முறி இணர்க் கொன்றை நன்பொன் கால*
*கீழ்கெழு குலிமுகை அங்கை அவிழ*
*தோடார் தோன்றி குருதி பூப்ப”*

*— நப்பூதனார், குறிஞ்சிப்பாட்டு (உ.கு. 11)*

என்ற அடியால் இயற்கை நயம்பட கூறியுள்ளார். செழிப்போடு பூத்த காயா மலரும், பொன் போன்ற கொன்றை மலரும், முகையோடு மணம் வீசும் கோடலும், செந்நிறக் காந்தள் மலரும் இயற்கை மணம் வீசுவதை இவ்வடிகளால் காணலாம்.

### 3. புற இலக்கியத்தில் இயற்கை

ஆண்மகனின் போர், வீரம், கொடை, ஈகை போன்றவற்றை வெளிப்படுத்துவது புற இலக்கியம் ஆகும். சங்க இலக்கியப் புறநூல்களுள் புறநானூறு மக்களின் வாழ்க்கைத் துணையாக அமையும் நூல் எனலாம்; அஃது கூறாத செய்திகளே இல்லை எனும் அளவிற்குப் பரந்த பொருண்மை கொண்டது. புறநூல்களிலும் இயற்கையழகை வருணித்துக் கூறுகின்றனர். காடுகளைக் கடவுளரும் விரும்பினர்; மகளிர்க்கும் வீரர்க்கும் இத்தகைய சூழல் இனிமை தந்தது. மன்னர்களும் மக்களைக் காத்தனர்; வேண்டிய இடங்களில் மழை பெய்தது; அம்மக்களுக்கு நோய் இல்லை.

*“காடே கடவுள் வேண்டு புறவே*
*ஒள்ளிழை மகளிரொடு மள்ளர் வேண்ட*
*ஆறே அஃதனைத்து அன்றியும் ஞாலத்துக்*
*கூலம் பகர்நர் குடிபுறந் தராஅக்*
*குடிபுறந் தருநர் பாரம் ஓம்பி*
*அழல் சென்ற மருங்கின் வெள்ளி ஓடாது*
……………………………………………
*பூத்தன்று பெரும நீ காத்த நாடே”*

*— (உ.கு. 12)*

என்ற அடிகளால் இதனை அறியலாம். திருப்பரங்குன்றம், திருமாலிருங்குன்றம் போன்ற மலைகளில் கடவுளர் இருந்தனர் என்பதற்குப் பரிபாடல் சான்று தருகிறது. இயற்கையோடு இரவலர் எடுக்கும் பிச்சைப் பாத்திரங்களைக் கூறும் வண்ணமும் தமிழ்ச் சான்றோர் படைத்துக் காட்டுவர்.

*“பாழூர் நெருஞ்சிப் பசலை வான்பூ*
*ஏர்தரு சுடரொடு எதிர்கொண் டாஅங்கு*
*இலம்படு புலவர் மண்டை விளங்கு புகழ்க்*
*கொண்பெருங் கானத்துக் கிழவன்*
*தண்டார் அகலம் நோக்கினர் மலர்ந்தோர்”*

*— மோசிகீரனார் (உ.கு. 13)*

என்ற அடிகளால் மோசிகீரனார், கதிரவனைப் பார்த்துப் பூக்கும் நெருஞ்சி மலர் போல, தாம் வழங்கும் அரசர்களை நோக்கி இரவலர் செல்வதை இயற்கை நயம்படப் படம்பிடித்துக் காட்டுகிறார். பெரும்பாலும் புறநூல்களில் இயற்கையைக் கூறுபவர்கள் சங்கக் கவிஞர்களே என்பதைப் பதிற்றுப்பத்தின் மூலமும் அறிய முடிகிறது; அரசர்களின் வீரத்தை இயற்கையோடு

இணைத்துப் பரணர் கூறுகிறார்.

*"சுடர் வீ வேங்கை"*

*— பரணர், பதிற்றுப்பத்து (உ.கு. 14)*

என்ற அடியால் வேங்கை மரம் பூத்து ஒளி தருகிறது எனவும், அதைக் கண்ட யானை தன் பகைவனாகிய புலி என்று கருதித் தந்தங்களால் குத்தியது எனவும் பரணர் இயற்கை நயம்படக் கூறுவார். இவ்வாறு பூத்த நெய்தல், வெள்ளம் தைத்த காஞ்சி, நாடுகாண் அவிர்சுடர் போன்ற பல தலைப்புகளில் இயற்கை அழகை அறியலாம்.

ஆற்றுப்படைகளிலும் இயற்கையழகைக் காணலாம். திருப்பரங்குன்றத்தின் அழகும் மதுரையின் சிறப்பும் நக்கீரரால் திருமுருகாற்றுப்படையில் விளக்கப்படுகின்றன. அம்மலையின் அருவி பொன்னையும் கனியையும் தேனையும் புரட்டி வருகிறது; அதனை யாரும் பருகவில்லையே என்று நக்கீரர் உணர்த்தும் அழகை,

*"பெறல் அரும் பரிசில் நல்குமதி பலவுடன்*
*வேறுபல் திசையின் நுடங்கி அகில் சுமந்து*
*ஆரம் முழுமுதல் உருட்டி வேரல்*
*இழுமென இழிதரும் அருவிப்*
*பழமுதிர் சோலை மலைகிழவோனே"*

*— நக்கீரர், திருமுருகாற்றுப்படை (உ.கு. 15)*

என்ற அடிகளால் மலைவளத்தின் அழகை நக்கீரர் இயற்கை நயம்படப் பாடுவதைக் காணலாம். 'மலைபடுகடாம்' எனும் தலைப்பே கற்பனை கலந்த இயற்கையைக் குறிப்பதாகும். மயில் ஆடும் அழகும், துள்ளி விளையாடும் மான்களும், ஓசையிடும் குரங்கினமும், துதிக்கையால் பிணைந்து விளையாடும் யானைக் குட்டியும், பாய்ந்து செல்லும் புலியும், அச்சமூட்டும் அருவியும், மலரும் அரும்பும் மணக்கும் பூக்களும், தேன் அருந்தும் வண்டினிசையும் நிறைந்த மலையின் அழகை,

*"தலைநாட் பூத்த பொன்னினர் வேங்கை*
*மலைமாரி ஊஉம் ஏமாப் பூசல்*
*கன்றரைப் பட்ட கயந்தலை மடப்பிடி*
*வலிக்குவர் அம்பாகிய கணவன் ஓம்பலின்*
*என்றிவ் வனைத்தும் இயைந்தொடுங்கிக்*
*கலகைத் தவிர்த்த எவ்வருள் திறந்த*
*மலைபடுகடாஅ மாதிரத்தியை"*

*— பெருங்கௌசிகனார், மலைபடுகடாம் (உ.கு. 16)*

**Article DOI: https://doi.org/10.63300/tm12042026.33**

என்ற அடிகளால் பெருங்கௌசிகனார் படம்பிடித்துக் காட்டுகிறார்.

சங்கப் புலவர்கள் அரசனின் துன்பத்தையும் இன்பத்தையும் நன்கு அறிந்தவர்கள்; இயற்கையின் அழகை ரசித்தார்கள் என்பதை அவர்கள் பாடும் கையறுநிலைப் பாடல்களிலும் காணலாம். அரசனுக்குத் துன்பம் வந்தபோது, இயற்கையைத் துணைக்கு அழைப்பர். பாரி இறந்தபின் பறம்பு மலை நீர்வற்றி வறண்டு கிடக்கும் அவல நிலையைக் கூறுவதோடு, அம்மலையின் இயற்கை அழகையும் கபிலர் கூறுவார்.

*"பெட்டாங்கு ஈயும் பெருவளம் பழுநிப்*
*பாரி மாய்ந்தென கலங்கிக் கையற்று*
*நீர்வார் கண்ணேம் தொழுது நிற்பாஅழிச்சிச்*
*சேறும் வாழியோ பெரும பேயர் பறம்பே"*

*— கபிலர், புறநானூறு (உ.கு. 17)*

என்ற அடிகளால் பாரியை இழந்து கபிலர் பாடும் கவிநயமும் அவல அழகும் காணமுடிகிறது. ஒல்லையூர் நாட்டை ஆண்ட பெருந்தலைச் சாத்தனார் இறந்தபோது, அந்நாடே அவலத்தில் இருந்தது; மக்கள் அனைவரும் கண்ணீர் சொரிந்தனர். அத்தகைய நிலையில் இயற்கையை விளித்துப் பாடுகிறார் கீரந்தையார்.

*"வல்வேல் சாத்தன் மாய்ந்தபின்றைத்*
*முல்லையும் பூத்தியோ ஒல்லையூர் நாட்டே"*

*— கீரந்தையார், புறநானூறு (உ.கு. 18)*

என்ற அடிகளால் இதனை உணரலாம். முல்லைப்பூ பூத்திருப்பதைக் கண்ட புலவர், நாட்டு மக்கள் அனைவரும் துன்பத்தோடு இருக்கும்போது நீ மட்டும் மலர்கிறாயே எனப் பூவை நோக்கிக் கேட்கும் அவல அழகைக் காணமுடிகிறது.

**இயற்கைக் கூறுகளின் இலக்கியப் பயன்பாடு**

| இயற்கைக் கூறு | பிரிவு (அகம்/புறம்) | உணர்த்தும் கருத்து | மேற்கோள் / புலவர் |
|---|---|---|---|
| வேங்கை மரம் | அகம் | தோழமையும் பிரிவுத் துணையும் | நக்கீரர் |
| முல்லை மலர் | அகம் | தலைவன் வருகையை அறிவித்தல் | பேயனார் |

| Copyright © Author(s)

**Article DOI: https://doi.org/10.63300/tm12042026.33**

| இயற்கைக் கூறு | பிரிவு (அகம்/புறம்) | உணர்த்தும் கருத்து | மேற்கோள் / புலவர் |
|---|---|---|---|
| புன்னை மரம் | அகம் | உடன்பிறப்புப் பாசம் | (உ.கு. 9) |
| வேங்கை மலர் | புறம் | அரசனின் வீரம் | பரணர் |
| பறம்பு மலை | புறம் | வள்ளல் பெருமையும் இழப்பின் அவலமும் | கபிலர் |
| முல்லைப் பூ | புறம் | கையறுநிலை அவலம் | கீரந்தையார் |




***படம் 2: அக–புற இலக்கியங்களில் இயற்கைக் கூறுகள் ஏற்கும் குறியீட்டுப் பொருள்***

## 4. முடிவுரை

இவ்வாறு சங்க இலக்கியத்தின் மூலம் இயற்கை அழகுகளையும் சொல்லாட்சிகளையும் புலவர்கள் திறம்படப் பயன்படுத்தினர் என்பதை அக்கால நூல்களிலிருந்து அறியலாம். பண்டைய காலத் தமிழர்கள் இயற்கையோடு ஒன்றி வாழ்ந்தவர்கள் என்பதைச் சங்க இலக்கிய அகநூல்களிலும்,

| Copyright © Author(s)

**Article DOI:** https://doi.org/10.63300/tm12042026.33

புறநூல்களிலும், கையறுநிலைப் பாடல்களிலும் காணும் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன. தொல்காப்பியர் வகுத்த திணைக் கோட்பாட்டின் அடிப்படையில், முதற்பொருள் முதல் உரிப்பொருள் வரை இயற்கை இழையோடி நிற்பதைக் காண முடிகிறது. அகத்திணையில் தலைவன்–தலைவியரின் உணர்வுகளுக்கு இயற்கை சாட்சியாகவும் தூதாகவும் அமைய, புறத்திணையில் அது அரசனின் வீரத்திற்கும் வள்ளன்மைக்கும் கையறு நிலைக்கும் உருவகமாக விளங்குகிறது. எனவே, அக்காலத் தமிழர் தம் வாழ்வோடு இயற்கையையும் இணைத்து வாழ்ந்த பெருமையைச் சங்கப் புலவர்களின் பாடல்கள் மூலம் இன்றும் அறிய முடிகிறது.

**சான்றுக் குறிப்புகள்**

[1.] தொல்காப்பியர். தொல்காப்பியம், அகத்திணையியல், நூற்பா 3.
[2.] தொல்காப்பியர். தொல்காப்பியம், அகத்திணையியல், நூற்பா 4.
[3.] தொல்காப்பியர். தொல்காப்பியம், அகத்திணையியல் (கருப்பொருள் நூற்பா).
[4.] தொல்காப்பியர். தொல்காப்பியம், அகத்திணையியல் (பொதுவியல் நூற்பா).
[5.] கபிலர். (பொ.வே. சோமசுந்தரனார், உரை.) குறுந்தொகை.
[6.] பேயனார். (பொ.வே. சோமசுந்தரனார், உரை.) ஐங்குறுநூறு.
[7.] நக்கீரர். (பொ.வே. சோமசுந்தரனார், உரை.) குறுந்தொகை.
[8.] (அ. நாராயணசாமி, உரை.) நற்றிணை.
[9.] (பொ.வே. சோமசுந்தரனார், உரை.) முல்லைப்பாட்டு.
[10.] இறையனார். குறுந்தொகை (பாயிரப் பாடல்).
[11.] நப்பூதனார். கபிலர் பாடிய குறிஞ்சிப்பாட்டு.
[12.] (ஔவை. துரைசாமிப்பிள்ளை, உரை.) புறநானூறு.
[13.] மோசிகீரனார். (ஔவை. துரைசாமிப்பிள்ளை, உரை.) புறநானூறு.
[14.] பரணர். (ஔவை. துரைசாமிப்பிள்ளை, உரை.) பதிற்றுப்பத்து.
[15.] நக்கீரர். (பொ.வே. சோமசுந்தரனார், உரை.) திருமுருகாற்றுப்படை.
[16.] பெருங்கௌசிகனார். (பொ.வே. சோமசுந்தரனார், உரை.) மலைபடுகடாம்.
[17.] கபிலர். (ஔவை. துரைசாமிப்பிள்ளை, உரை.) புறநானூறு.
[18.] கீரந்தையார். (ஔவை. துரைசாமிப்பிள்ளை, உரை.) புறநானூறு.

**மேற்கோள் நூற்பட்டியல் (Works Cited — MLA பாணி)**

[1.] நாராயணசாமி, அ., உரையாசிரியர். நற்றிணை. திருநெல்வேலி, [பதிப்பாண்டு கிடைக்கவில்லை].
[2.] துரைசாமிப்பிள்ளை, ஔவை., உரையாசிரியர். பதிற்றுப்பத்து. சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, [பதிப்பாண்டு கிடைக்கவில்லை].

[3.] துரைசாமிப்பிள்ளை, ஔவை., உரையாசிரியர். புறநானூறு. சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, [பதிப்பாண்டு கிடைக்கவில்லை].

[4.] தொல்காப்பியர். தொல்காப்பியம் (எழுத்ததிகாரம், அகத்திணையியல்). [பதிப்பாசிரியர் மற்றும் பதிப்பாண்டு கிடைக்கவில்லை].

[5.] சோமசுந்தரனார், பொ.வே., உரையாசிரியர். ஐங்குறுநூறு. சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, [பதிப்பாண்டு கிடைக்கவில்லை].

[6.] சோமசுந்தரனார், பொ.வே., உரையாசிரியர். குறுந்தொகை. சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, [பதிப்பாண்டு கிடைக்கவில்லை].

[7.] சோமசுந்தரனார், பொ.வே., உரையாசிரியர். திருமுருகாற்றுப்படை. சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, [பதிப்பாண்டு கிடைக்கவில்லை].

[8.] சோமசுந்தரனார், பொ.வே., உரையாசிரியர். மலைபடுகடாம். சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, [பதிப்பாண்டு கிடைக்கவில்லை].

[9.] சோமசுந்தரனார், பொ.வே., உரையாசிரியர். முல்லைப்பாட்டு. சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, [பதிப்பாண்டு கிடைக்கவில்லை].

இவ்வாய்வுக் கட்டுரையின் ஆசிரியர், இக்கட்டுரையின் ஆய்வு, தரவுச் சேகரிப்பு, பகுப்பாய்வு அல்லது பிரசுரம் தொடர்பான எந்தவொரு நிதி சார்ந்த அல்லது தனிப்பட்ட அமைப்புகளுடனும் எந்தவிதமான நலன்சார் முரண்பாடுகளும் (Conflict of Interest) இல்லை என்று இதன்மூலம் உறுதியளிக்கிறார்.

*The author(s) declare that there is no conflict of interest — financial, personal, or otherwise — associated with the research, authorship, or publication of this article. The findings and conclusions presented here are the result of independent academic research and were not influenced by any external organization, funding body, or third party. No funding was received for the preparation of this manuscript.*